

# சீறத்துன்னபி ﷺ

## நாள் 18

# இன்றைய தலைப்புகள்

- பகுதி 1: உமர் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களைக் கொலை செய்ய எண்ணுவது
- பகுதி 2: உமர் (ரலி) தனது சகோதரி பாத்திமாவின் வீட்டிற்கு செல்வது
- பகுதி 3: உமர் (ரலி) இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வது
- பகுதி 4: மக்காவின் முஸ்லிம்களுக்கு கிடைத்த பெரிய ஊக்கம்

## பகுதி 1: உமர் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களைக் கொலை செய்ய எண்ணுவது

- கஃபாவின் அருகில் ஸூரா அல்ஹாஃக்ஃகாவைக் கேட்டு, இஸ்லாம் அவரது இதயத்தில் நுழைந்த பின்பும், உமர் (ரலி) இஸ்லாத்திற்கு எதிரான தனது வன்முறையைத் தொடர்ந்தார்.

- ஒரு நாள் குரைஷிகள் அமர்ந்திருந்த கூட்டத்தில் உமர் (ரலி) அவர்களும் இருந்தார்கள்.

- அங்கிருந்த அபூஜஹ்ல், கூட்டத்தினரிடம் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக வசைபாடத் தொடங்கினான். அவன், ''இந்த மனிதர் நமது மதத்தைச் சபிக்கிறார். நமது பெற்றோர்கள் மற்றும் முன்னோர்களை அவமதித்து வருகிறார். அதனால், இந்த மனிதரை கொலை செய்யவேண்டும். அதற்கு யார் நமக்கு உதவுவார்கள்?'' என்று கேட்டான்.



- பின்னர் அபூஜஹ்ல், ''இதை வெற்றிகரமாக செய்து முடிப்பவருக்கு, சிவப்பு மற்றும் கருப்பு நிற 100 சிறந்த ஒட்டகங்களை (இது பெரும் செல்வமாகும்) நான் பரிசளிக்கிறேன். மேலும் அதனுடன் சேர்த்து 1000 வெள்ளிக் காசுகள் நிறைந்த பைகளையும் கொடுக்கிறேன்'' என்று கூறினான்.

- இதைக் கேட்ட உமர் (ரலி) பேராசை கொண்டு, அந்த வேலையை தான் செய்வதாக கூறினார்கள்.

- வீட்டிற்குத் திரும்பிய உமர் (ரலி) தனது வாளை கையில் எடுத்துக் கொண்டு, நபி (ஸல்) அவர்களைக் கொல்வதற்காக ஆவேசத்துடன் புறப்பட்டார்.



- அவர் வீதியில் நடந்து வந்துகொண்டிருந்தபோது, நுஜம் இப்னு அப்துல்லாவை சந்தித்தார். நுஜம் சமீபத்தில்தான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர். ஆனால் அதைப் பற்றி யாரிடமும் சொல்லவில்லை.

- உமர் (ரலி) நிலைமையைப் பார்த்ததும் கவலைப்பட்டவராய் நுஜம், ''இவ்வாறு ஆவேசமாய் எங்கு செல்கிறீர்கள்'' என்று கேட்டதற்கு உமர் (ரலி), ''பொறுத்தது போதும்; இந்த மனிதர் நம் முன்னோர்களை இழிவுபடுத்திக் கொண்டு, நீண்ட நாட்களாக நம்மை ஏளனம் செய்து வருகிறார். நான் அவரைக் கொல்லப் போகிறேன்'' என பதிலளித்தார்கள்.

- இதைக்கேட்ட நுஜம் பீதியடைந்து உமரின் கவனத்தைத் திசைதிருப்ப, ''உமரே! உனது மதியை இழந்துவிட்டீரா! நீர் செய்யத் திட்டமிடும் இந்தக் கொடூரச் செயலுக்குப் பிறகு பனுஹாஷிம் கோத்திரம் உங்களை உயிருடன் விட்டுவிடும் என்று நீர் நினைக்கிறீரா?'' எனக் கேட்டார்.

- மேலும் நுஜம் எதையும் யோசிக்காமல் உடனே கூறினார்: ''நீர் உண்மையிலேயே ஏதாவது செய்ய விரும்பினால், முதலில் சென்று உங்கள் சொந்த குடும்பத்தை சரிசெய்யவும்''.

- உமர் (ரலி) குழப்பமடைந்து, ''நீங்கள் என்ன கூறுகிறீர்?'' என்று கேட்டார்கள். அதற்கு நுஜம், ''உங்களுக்குத் தெரியாதா? உங்கள் சொந்த சகோதரியும்,

அவரது கணவரும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள்!'' என்று பதிலளித்தார்.

- உமர் (ரலி) கவனத்தை அவரது சகோதரியின் பக்கம் திருப்பினால், நபி (ஸல்) அவர்களைப் பாதுகாக்கும் ஒரு முயற்சியாக அது இருக்கும் என நினைத்து நுஐம் அவ்வாறு கூறினார்.

- இதைக் கேட்ட உமர் (ரலி) மேலும் ஆத்திரமடைந்து தனது திசையை மாற்றிக் கொண்டு, கையில் ஏந்திய வாளுடன் தன் சகோதரியின் வீட்டிற்குச் சென்றார்கள்.

## பகுதி 2: உமர் (ரலி) தனது சகோதரி பாத்திமாவின் வீட்டிற்கு செல்வது

- உமர் (ரலி) தனது சகோதரியின் வீட்டு வாசலை அடைந்ததும், உள்ளிருந்து குர்ஆன் ஓதும் குரலைக் கேட்டார். உடனே வேகமாக கதவைத் தட்டினார்.



- உள்ளே, உமர் (ரலி) சகோதரி பாத்திமா பின்த் அல்கத்தாப் மற்றும் அவரது கணவர் சயீத் ஆகியோருக்கு கப்பாப் இப்னு அல்அரத் குர்ஆன் கற்பித்துக் கொண்டிருந்தார்.

- புதிதாக யாராவது இஸ்லாத்தைத் தழுவினால், அவர்களுக்குக் கற்பிக்க ஒரு ஆசிரியரை நியமிப்பது நபி (ஸல்) அவர்களின் வழக்கம்.

- கதவின் அருகே உமர் (ரலி) இருப்பதை உணர்ந்த பாத்திமா பதறினார்.

உடனே அவர்கள் குர்ஆன் ஓதுவதை நிறுத்திவிட்டு, அதை உடனே மறைத்து வைத்தனர். மேலும் கப்பாப் (ரலி) அவர்களையும் தன் வீட்டிற்குள் மறைத்து விட்டனர்.

- கதவு திறக்கப்பட்டதும் உமர் (ரலி) ஆத்திரத்துடன் உள்ளே நுழைந்து, தான் கேட்டது என்ன என்று கோபமாக வினவினார். பாத்திமா தாங்கள் எதுவும் பேசவில்லை என்று மறுத்தார். ஆனால் உமர் (ரலி) அந்த பதிலை ஏற்காமல், ''நான் கேட்டது என்ன என்று எனக்குத் தெரியும்'' என கூறினார்கள்.

- உமர் (ரலி) தொடர்ந்து கூறினார்கள்: ''நீங்கள் இருவரும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டீர்கள் என்று எனக்கு செய்தி வந்தது''. இதைக்கேட்ட பாத்திமாவும், சயீத்தும் ஒரு கணம் திகைத்து, பின் மறுத்தார்கள்.

- தொடர்ந்து அவர்கள் அதை மறுத்ததால், ஆத்திரத்தில் உமர் (ரலி) அவர்கள் சயீத்தை கையால் குத்தினார். இதைப் பார்த்த பாத்திமா, நடுவில் வந்து அந்த தாக்குதலை நேரடியாக வாங்கிக்கொண்டார்.

- இதனால் அவரது உதடுகள் வெடித்து, ரத்தம் கசிந்து, கீழே விழுந்து விட்டார்.

- உடனே பாத்திமாவும், அவரது கணவர் சயீத்தும் கோபமடைந்து, ''ஆம்! நாங்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டோம். இப்போது நீங்கள் விரும்பியபடி செய்துகொள்ளுங்கள். நாங்கள் முஹம்மது (ஸல்) அவர்களை நம்புகிறோம்'', என்று கூறினர்.

- அவர்கள் தங்கள் நம்பிக்கையில் உறுதியாக நின்று, அவர்கள் காட்டிய தைரியத்தையும், அவரது சகோதரியின் இரத்தத்தையும் பார்த்தபோது, உமர் (ரலி) இதயம் சிறிது மென்மையாகி, அவர் அமைதியடைந்தார்.

- உமர் (ரலி) தனது தங்கையிடம், ''நீங்கள் ஓதியத்தைக் காட்டுங்கள்'' எனக்கேட்டார். அதற்கு பாத்திமா த யங்கினார். அதைப்பார்த்த உமர் (ரலி) தான் குர்ஆனை அவமதிக்க மாட்டேன் என்று உறுதியளித்து, குர்ஆனைக் கேட்டார்கள். ''நீங்கள் ஒரு இறைமறுப்பாளர். தூய்மையானவர்கள் மட்டுமே குர்ஆனைத் தொட முடியும்'' என்று பாத்திமா பதிலளித்தார்.

- உடனே உமர் (ரலி) தனது சகோதரியின் இடத்திலேயே அங்கத் தூய்மை செய்தார். பின்னர் அவர் தோல் காகிதத்தில் எழுதியிருந்த ஸூரா தாஹா (20) வசனங்களைப் படித்தார். அவ்வாறு அவர் படிக்கும்போது, இஸ்லாம் அவர்

இதயத்தை நிரப்பியது.

## பகுதி 3: உமர் (ரலி) இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வது

- பின்னர் உமர் (ரலி) பாத்திமாவின் கணவர் சயீத்திடம், முஹம்மது (ஸல்) அவர்களை எங்கே காணலாம் என்று கேட்டார்.

- உமர் (ரலி) அவர்களின் நடத்தையில் மாற்றத்தைக் கண்ட சயீத், நபி (ஸல்) அவர்கள் அர்காமின் வீட்டில் இருக்கிறார்கள் என்று தெரிவித்தார்.

- உடனே உமர் (ரலி) அங்கிருந்து புறப்பட்டு, தன் கையில் இருக்கும் வாளுடன் அர்காமின் வீட்டிற்குச் சென்றார்கள்.

- அவர்கள் அங்கு சென்றதும் கதவைத் தட்டினார்கள். நபித்தோழர் ஒருவர் வெளியில் வாளுடன் உமர் இருப்பதைக் கண்டார். அவர் கவலையுடன் நபி (ஸல்) அவர்களிடம் திரும்பி வந்து, ''அல்லாஹ்வின் தூதரே! உமர் தனது கையில் வாளுடன் வாசலில் நிற்கிறார்!'' என்று தெரிவித்தார்.

- சில நாட்களுக்கு முன்பு இஸ்லாத்தைத் தழுவிய ஹம்ஸா (ரலி), ''அவரை உள்ளே விடுங்கள். ஏனெனில், அல்லாஹ் அவருக்கு நல்லதை நாடியிருந்தால், அவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வார். அல்லாஹ் இதைத் தவிர வேறொன்றை நாடியிருந்தால், அவர் கையில் வைத்திருக்கும் வாளின் மூலமே அவருடைய முடிவு இருக்கும்!'' என்று கூறினார்கள்.

- தோழர்கள் கதவைத் திறந்து, உமர் (ரலி) அவர்களின் இரண்டு கைகளையும் பிடித்து வீட்டிற்குள் அழைத்துச் சென்றனர்.

- நபி (ஸல்) அவர்களின் முன் உமர் (ரலி) அமர்ந்தார்கள். இந்த சம்பவம் இப்னு இஷ்ஹாக்கில் பதிவாகியுள்ளது.

- நபி (ஸல்) அவர்கள் உமரைப் பிடித்து, அவரைத் தம் அருகில் இழுத்துக்கொண்டு, ''ஓ இப்னு அல்கத்தாபே! நீர் ஏன் இங்கு வந்தீர். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீர் இந்தப் பாதையில் தொடர்ந்தால், அல்லாஹ் உமக்கு தண்டனை கொடுத்து, உம்மை அழித்துவிடுவான்'', என்று கூறினார்கள்.

- உமர் (ரலி) அவர்கள் அங்கிருந்த அனைவரும் அதிர்ச்சியடையும்படி, ''யா

ரஸுலல்லாஹ்! நான் இஸ்லாத்தை ஏற்று, அல்லாஹ்வை நம்புவதற்காக இங்கு வந்துள்ளேன்'' என்று பதிலளித்தார்கள்.

- இதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள், ''அல்லாஹு அக்பர்!'' என்று உரக்கச் சொன்னார்கள். உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதை அர்காமின் வீட்டில் இருந்த அனைவரும் உடனடியாக தெரிந்து கொண்டனர்.

## பகுதி 4: மக்காவின் முஸ்லிம்களுக்கு கிடைத்த பெரிய ஊக்கம்

- அல்லாஹ், உமர் (ரலி) அவர்களுக்கு ஹிதாயத் வழங்கி நல்வழி காட்டிவிட்டான். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றது, இஸ்லாமிய வரலாற்றில் ஒரு முக்கியமான தருணம் ஆகும்.

- உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட உடனேயே, அவர்கள் தான் இஸ்லாத்தைத் தழுவியது குறித்து குரைஷிகளிடம் அச்சமின்றி, பகிரங்கமாக அறிவித்தார்கள்.

- அவர்கள் தனிப்பட்ட முறையில் தனது உறவினரான அபூஜஹ்லின் வீட்டிற்குச் சென்று, தான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதைத் தெரிவித்தார்கள். அபூஜஹ்ல் கோபத்தில் அவர்களை அவமதிக்கும் நோக்கில், கதவை அவர்கள் முகத்தின்முன் வேகமாக சாத்தினான்.

- பிற்காலத்தில் உமர் (ரலி) மரணப் படுக்கையில் இருந்தபோது, இப்னு மஸ்ஊத் (ரலி), ''உமர் இஸ்லாத்திற்கு வந்ததில் இருந்து, நாங்கள் எப்பொழுதும் இஸ்லாவில் (கௌரவத்தில்) வாழ்ந்து கொண்டிருக்கிறோம்'' என்று கூறியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

- உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய பிறகுதான் முஸ்லிம்கள் வெளிப்படையாக ஹராமில் தொழுகை நடத்த முடிந்தது.

- உமர் (ரலி) அவர்களிடம், ''அல்ஃபாரூக் என்ற பட்டம் எப்படி கிடைத்தது?'' என்று கேட்கப்பட்டதற்கு, அவர்கள் கூறிய விளக்கம் இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிப்பில் உள்ளது.

- இஸ்லாத்தைத் தழுவிய பிறகு, உமர் (ரலி) ஒரு நாள் நபி (ஸல்) அவர்களிடம்,

‘‘நாம் சரியான மார்க்கத்தில் செல்கிறோமா?’’ என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், ‘‘நிச்சயமாக நாம் இம்மையிலும், மறுமையிலும் சரியான மார்க்கத்திலேயே இருக்கிறோம்’’ என்று பதிலளித்தார்கள்.



- பின்பு உமர் (ரலி) அவர்கள், ‘‘அப்படியானால் நாம் ஏன் நமது நடவடிக்கைகளை இரகசியமாக செய்ய வேண்டும்?’’ என்று வினவினார்கள்.

- எனவே, முஸ்லிம்கள் அனைவரும் பகிரங்கமாக தொழுகை நடத்துவதற்காக கஃபாவை நோக்கி பேரணியாக செல்வது என்று விவாதிக்கப்பட்டு, முடிவு செய்யப்பட்டது.

- பின்பு பட்டப்பகலில் முஸ்லிம்கள் ஒற்றுமையாக, கஃபாவை நோக்கி அணிவகுத்துச் சென்றனர். அவர்கள் இரண்டு வரிசைகளில் ஒன்று ஹம்ஸா (ரலி) தலைமையிலும், மற்றொன்று உமர் (ரலி) தலைமையிலும் அணிவகுத்துச் சென்றனர்.

- கஃபாவை அடைந்ததும், அவர்கள் அனைவரும் முதன்முறையாக எல்லா மக்கள் முன்னிலையில் வெளிப்படையாக தொழுகை நடத்தினர்.

- அந்த நேரத்தில் நபி (ஸல்) அவர்கள் உமர் (ரலி) அவர்களிடம், ‘‘நீங்கள் உமர் அல்ஃபாருக்’’, அதாவது உண்மையையும், பொய்யையும் பிரித்து அறிபவர் என்ற பொருளில் அந்தப் பட்டத்தைக் கொடுத்தார்கள்.